[30th October 1962

திருமதி ஏ, எஸ். பொன்னம்மாள் : ஒவ்வொரு ப்ரைமரி ஹெல்த் ஸெண்டருக்கும் மூன்று ஸப்-செண்டர்கள் இருக்கின்றன. அந்த மூன்று ஸப்-ஸெண்டர்களிலே டாக்டர் சென்று பார்வையிட்டுவிட்டு, அன்றைக்கே ப்ரைமரி ஸெண்டருக்குத் திரும்பி வந்துவிடுகிறார். ஆகையால், டாக்டர் ப்ரைமரி ஸெண்டரிலேயே தான் தங்குகிறார் என்பதைக் கனம் அங்கத்தினர் கவனிக்கவேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. கரு. சீமைச்சாமி : நான் அதைத் தெரியாமல் சொல்லவில்லை. தெரிந்தே தான் சொல்கிறேன். ஸப்-ஸெண்டர்களுக்குச் சென்றுவிட்டு, டாக்டர் சாயங்காலத்திற்குள் திரும்பிவிடுகிறார் என்றாலும், ப்ரைமரி ஹெல்த் ஸெண்டருக்குப் பகலில் வருகிறவர்களுக்கு மருந்துகள் கொடுக்க முடிவதில்லை என்பதுதான் பிரச்னை.

கனம் சபாநாயகர் : டாக்டர் வருவதையும் போவதையும் கனம் அங்கத்தினர் பார்த்துக்கொண்டிருக்கிறாரா என்ன ?

Pre-elementary schools

* 949 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to open Pre-Elementary Schools; and

(*b*) if so, the number proposed for Salem district in 1962–63?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes, Sir.

(*b*) Forty-eight pre-school centres.

நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையின் சுற்றுப்புறம் (சுகாதாரம்)

950. கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையார் கரும்பு சக்கையினை உலைக் கூடத்திற்குப் பயன்படுத்துவதால் சுற்றுப்புறவாசிகளின் சுகாதாரம் பாதிக்கப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) அப்படியானால், அதைத் தவிர்க்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (அ) A representation has been received from the Nellikuppam Panchayat.

(இ) The matter is under examination.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஃபாக்டரி இன்ஸ்பெக்டர்கள் ஆலைக்கு வந்து, இந்த குறைபாடுகளை எடுத்துக்காட்டுகிற சமயத்தில் மட்டும் சீர் திருத்தம் செய்துவிட்டு, மற்ற நாட்களில் சும்மா இருந்துவிடுகிறார்கள். ஆகவே, மற்ற நாட்களில் இந்தத் தொந்தரவுகள் இருப்பதால், அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்து, நிரந்தரமான வகையில் அந்தப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு நன்மை தேடித்தரக்கூடிய வகையில், ஃபாக்டரியில் கரும்புச் சக்கைகளை உலைக்கூடத்திற்குப் பயன்படுத்தக்கூடாது என்று அரசாங்கம் வற்புறுத்துமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே, இது பரிசீலனையில் இருக்கும் காரணத்தால், கனம் அங்கத்தினர் சொல்வதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.